**சி.டபிள்யூ.ஈ கொன்ஸ்ட்ரக்சன் அன்ட் இன்ஜினியரிங் (பிறைவெட்) லிமிட்டட் - 2017**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

சி.டபிள்யூ.ஈ கொன்ஸ்ட்ரக்சன் அன்ட் இன்ஜினியரிங் (பிறைவெட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார இலாபநட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எல்கேஎஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) அழைப்ப வைப்பு கணக்கின் வட்டி வருமானத் தொகையான ரூபா. 1,828,164 மற்றும் ரூபா. 720,000 போன்றன 2012 திசெம்பர் 17 தொடக்கம் 2016 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரியவை மீளாய்வாண்டில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 2016 திசெம்பர் 31 இல் திரண்ட இலாபம் ரூபா. 1,828,164 தொகையினால் குறைவடைந்த காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் நட்டம் ரூபா. 720,000 தொகையினால் அதிகரித்துக் காணப்பட்டிருந்தன.

(ஆ) 2016 ஏப்ரல் 01 ஆம் திகதியில் வங்கி மீதிகளில் இணக்கம் செய்யப்படாத வேறுபாட்டு தொகையான ரூபா. 278,519 ஆனது தொங்கல் கணக்கு நிலுவை பரீட்சை மீதியில் சரிசெய்யப்படாமல் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக்கூற்றின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் குளிரூட்டல் பொருட்கள் மற்றும் அலுமாரிகள் ரூபா. 25,549,090 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தவை 2017 திசெம்பர் 31 இல் வழியில் சரக்காக காணப்பட்டிருந்தவை தவறுதலாக விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் வழியில் சரக்கினை விற்பனைத் திரும்பலாக கருதி கம்பனியின் கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடங்கப்பட்ட குறைப்பு மீதி காரணமாக ரூபா. 694,869 தொகையானது வியாபாரக் கடன்கொடுத்தோரில் குறைவடைந்திருந்தது.

(உ) கொடுப்பனவு சீட்டுக்கள், பொருள் பெறுதல் தாள், வேலை முடிவடைந்த அறிக்கை, கட்டட ஒப்பந்தங்கள், அளவிட்டுப் பட்டியல், கட்டடநிர்மாணப் பதிவுகள் மற்றும் விற்பனை உறுதிச்சீட்டுக்களின் கிடைப்பனவுகளற்ற தன்மையின் காரணமாக இரண்டு வருமானக் கணக்குகளின் கூட்டு மொத்தத் தொகை ரூபா. 463,509,438, இரண்டு செலவினக் கணக்குகளின் கூட்டுமொத்தத் தொகை ரூபா. 671,718,187, நான்கு செலுத்தப்பட வேண்டிய கணக்குகளின் கூட்டுமொத்தத் தொகைகள் ரூபா. 335,368,198 மற்றும் இரண்டு பெறப்பட வேண்டிய கணக்குகளின் கூட்டுமொத்தத் தொகைகள் ரூபா. 298,912,974 போன்றவை தொடர்பாக திருப்தி அடையவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்த நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு நான் பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றேன்:

(அ) அபிப்பிராயத்தின் அடிப்படை மற்றும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) எனது அபிப்பிராயமாவது:
- மேலே குறிப்பிடப்பட்டவாறு, கணக்காய்விற்குத் தேவையான சகல தகவல்களையும் விளக்கமளிப்புகளையும் நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| விதிகள் / வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | |
| I. பிரிவு 5.2.5 | வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| II. பிரிவு 9.2 | கம்பனியின் பதவியணியினர் கோப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் கம்பனியின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,410,504 வரிக்குப் பிந்திய தேறிய நட்டமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்குப் பிந்திய தேறிய இலாபம் ரூபா 1,390,333 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 3,800,837 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிதி வருமானம் ரூபா 3,493,771 இனால் குறைந்தமை நிதிசார் விளைவுகளில் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியினால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் உறுப்புரைகளின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகளின் படி விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள்** | **அவதானிப்பு** |
|---|---|
| (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்களை மெய்மையாய்வு செய்வதற்காக கணிப்பீட்டுச் சபையை நடாத்தத் தவறியமை. |
| (ஆ) கணக்கீடு | பேரேட்டிலுள்ள கணக்கு மீதிகளை ஆதாரப்படுத்தும் ஆவணங்களை நியாயப்படுத்த முடிந்திருக்காமை. |
| (இ) மனித வள முகாமைத்துவம் | பதவியணிக்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெறத் தவறியமை. |